# எல்ல பிரதேச சபை
# பதுளை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 யூன் 21 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 செப்தெம்பர் 24 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் எல்ல பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக உரிய கணக்கு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான எல்ல பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) கிதல்எல்ல நீர் உத்தேசத் திட்டத்திற்குரிய ரூபா 5,045,289 பெறுமதியான 4 சொத்து விடயங்கள் கணக்கு வைக்கப்படாமையின் காரணமாக நிலையான சொத்துக் கணக்கின் மீதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமான

பங்களிப்புக் கணக்கின் மீதி என்பன அப் பெறுமானத்தினால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) சபைக்குச் சொந்தமான கிதல்எல்ல நீர் உத்தேசத் திட்டத்திற்காக 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையும் நிர்மாண கம்பனிக்குச் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை ரூபா 21,158,046 ஆக இருந்ததுடன் அதில் 33% ஆன உள் நாட்டுக்கடன் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 6,982,155 கடன் தொகை ரூபா 4,920,459 என கணக்கு வைக்கப்பட்டமையினால் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 2,061,696 தொகை குறைவாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 33,728,271 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,519,844 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,388,242 ஆக இருந்தது

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 1,570 | 704 | 581 |
| (ii) | வாடகை | 1,891 | 1,175 | 567 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 800 | 868 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 10,929 | 6,333 | 4,301 |

**2.2.2 நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 901,157 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 3,522,850 |

### 2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 149 ஆம் பிரிவின் பிரகாரமும் 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கு இணங்கவும் சுற்றுலா அபிவிருத்தி சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தங்குமிடங்களின் முன்னைய ஆண்டு வருமானத்தில் 01% இனை விஞ்சாத தொகை வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணமாக அறவீடு செய்வதற்காக உப விதி ஏற்பாடுகளை விதித்து அதன் பிரகாரம் கட்டணங்கள் அறவீடுசெய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஊவா மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2005 மே 09 ஆந் திகதிய சீஎல்ஜீ/1/ பி.சபை வாகனம் என்ற கடிதம் மற்றும் அதற்குரிய திருத்தங்களின் அறிவுரைகளுக்கு முரணாக தலைவருக்கு அங்கீகரிக்கப்பட்ட மாதாந்த எரிபொருள் அளவினை விஞ்சி 2594.7 லீற்றர் டீசலுக்காக ரூபா 201,649 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

### 2.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

சபை அதிகாரப் பிரதேசத்தில் இடமேகம பட்டியகும்புற கிராமத்தில் அமைந்துள்ள மொத்த காணியின் அளவான 12 ஏக்கர் 02 றூட் 13 பேர்சஸ் இல் ரத்தனகிரிவத்த என்ற பெயருடைய காணியில் 02 ஏக்கர் 01 றூட் 30 பேர்ச்சஸ் அளவில் பிரித்து விற்பனை செய்வதற்கான நில வரைபடைத்தை அங்கீகரிக்கும் போது 10% ஆன நில அளவை சபைக்கு வழங்கும் உடன்பாடு தொடர்பாக சபை கவனம் செலுத்தியிராமையினால் சபைக்கு கிடைக்க வேண்டிய 39 பேர்ச்சஸ் காணி அளவைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.